வாக்குமூலம்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
சி.சி.எண்.4/20
வழக்கு சாட்சி – அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சீனிவாசன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | நாராயணசாமி | தொழில் | விவசாயம் |
| கிராமம் | வெங்கடாஜலபுரம் | சமயம் | |
| தாலுக்கா | தேனி | வயது | 78 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.05.24

**( 1 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் வழக்கில் ஆஜராவாதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

அசா1 எனது மருமகன். எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 7 அல்லது 8 வருடங்களுக்கு முன்பாக எனது மருமகன் சுப்புராமிடம் எதிரி ஜெகதீசன் வங்கியில் லோன் வாங்கி கொடுப்பதற்காக எனது மருமகனின் சொந்த நிலமான 1 ஏக்கர் நிலத்தின் பத்திரத்தை கேட்டுள்ளார். அதற்கு எனது மருமகன் மேற்படி நிலத்தை வங்கியில் அடமானம் வைத்துள்ளதாகவும், பணம் வங்கிக்கு செலுத்தவேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி பணமான 1,86,000 த்தை எனது மருமகன் வங்கியில் செலுத்தி பத்திரத்தை மீட்டுள்ளார். அந்த பத்திரத்தை ஜெகதீசனிடம் எனது மருமகன் கொடுத்துள்ளார். அன்றையதினமே ஜெகதீசன் போலியாக பவர் பத்திரம் தயார் செய்து மறுநாள் ஜெகதீசனின் அம்மா பெயரில் கிரய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி விரபம் எனது மருமகனுக்கு சிறிது காலம் கழித்து தான் தெரியவந்தது. மேற்படி விபரம் எனக்கு நேரடியாக எங்கள் வீட்டில் நடந்ததால் தெரியவந்தது.

**1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 2ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னை போலிசார் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். எந்த போலிசார் விசாரித்தார்கள் என்றால் தேனி, வீரபாண்டி போலிசார் வந்து விசாரித்தார்கள். நான், என் மருமகன், மகள் அ னவைரும் ஒன்றாக

தான் இருந்து வருகிறோம் என்றால் சரிதான். 1ம் எதிரி ஜெகதீசன் என் மருமகனிடம் எந்த வங்கியில் கடன் வாங்கி தருவதாக கூறினார் என்றால் தெரியாது. என் மருமகனை ஏமாற்றி பவர் பத்திரம் வாங்கி விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிச் விசாரணையில் நான் 1 . 1/2 வருடத்திற்கு முன்பு எங்கள் ஊரை சேர்ந்த ஜெகதீசனிடம் பசுமாடுகளை வாங்கிய வகையில் 8 லட்சம் தரவேண்டியிருந்தது என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அதில் 4 லட்சம் போக மீத 4 லட்சம் தருவதாக கூறியிருந்தேன் என்றால் எனக்கு ஞாபகம்இல்லை. மீதி பணத்திற்காக சென்ற வருடம் ஏப்ரல் மாதம் ஜெகதீசன் எனது மருமகனிடம் நிலத்தை எழுதி தரச்சொன்னார் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் எனது மகள் மற்றும் மருமகனிடம் இருந்து 1ம் எதிரி அசல் பத்திரங்களை பிடுங்கி சென்றுவிட்டதாக வழக்கு பதிவு செய்யப்பட்டு அதில் நான் சாட்சிமளித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 5 லட்சம் ஜெகதீசன் கேட்டதாகவும் என் மருமகன் தரவில்லை என்பதால் பத்திரத்தை பிடுங்கி சென்றுவிட்டதாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நாளது வரை ஜெகதீசனுக்கும் எனது மருமகனுக்கும் என்ன வரவு செலவு என்ற தெரியாது என்றால் சரிதான். அசா1,2 எனது மருமகன் மற்றும் மகள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.